மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசியபோது குடமுழுக்கு செய்யவில்லையென்று கோரிக்கைகளை வைத்தார். மாண்புமிகு அம்மாவின் அரசு கடந்த காலங்களில் ஆதி திராவிடர் பகுதிகளில் 500 கோயில்களுக்கு ஒரு கோயிலுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் ஒதுக்கி, புனரமைப்பு செய்யப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 500 கிராம கோயில்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ஒதுக்கி, ஆக மொத்தம் 1,000 கோயில்களுக்கு குடமுழுக்கு செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த 3 திருக்கோயில்களிலும் இன்னும் ஒரு மாதத்திற்குள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு அம்மாவின் அரசால் இன்னும் 2 மாதங்களில் குடமுழுக்கு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) தடை செய்யப்பட்ட குட்கா விற்பனை முறைகேடுகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் தேதி தடை செய்யப்பட்டிருக்கக்கூடிய குட்கா என்கிற ஒரு போதைப் பொருளை விற்பனை செய்ததாக வருமான வரித் துறை ஒரு சோதனை நடத்தியிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், பேரவை விதி 55–லும் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள்.*

2017 ஜூன் 28] [பேரவைத் தலைவர்]

விதி 56–லும் என்னிடத்திலே அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். 9–32 மணிக்குக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடுகள்) என்னுடைய ஆய்விலே இருக்கிறதைப் பற்றி எல்லாம் நீங்கள் பேச முடியாது. இப்போதுதான் கொடுத்தீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் raise *பண்ணுவதற்கு மட்டும்தான் அனுமதி கொடுத்தேன். (குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று செய்தித்தாளைக் காண்பித்தனர்.)

நீங்கள் உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் சொல்கிறேன். ஏற்கெனவே பத்திரிகையில் வருகிற செய்தி, T.V.*–யில் வருகிற செய்தி இவற்றையெல்லாம் கொண்டுவந்து காட்டி அனுமதி கேட்டீர்களென்றால், என்னால் கொடுக்க முடியாது. ஆதாரத்தைக் கொண்டு வந்து கொடுத்து அனுமதி கேட்டீர்களென்றால் நான் சொல்லுவேன். (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் பத்திரிகைச் செய்தியைக் கொண்டுவந்து காட்டி வாய்ப்பு கேட்டால், என்னால் வாய்ப்பு தர முடியாது. அதெல்லாம் ஆய்வுக்கு வராது. இதெல்லாம் சரியில்லை. (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையில்லை. இம்மாதிரி செய்வது முறையில்லை. (குறுக்கீடுகள்) நான் என் ஆய்வில் இருப்பதை எப்படி அனுமதிப்பேன்? (குறுக்கீடுகள்) நான் முடிவு செய்துதான் சொல்ல முடியும். நீங்கள் ஓர் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்கலாம். நான் அனுமதிக்க வேண்டுமே! (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்கவில்லை. நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். நான் அனுமதிக்கவில்லை. நீங்கள் இம்மாதிரி பத்திரிகையைக் கொண்டுவந்து காட்டுவது தவறு. உங்கள் பத்திரிகையைக் கொண்டு வந்து நீங்கள் காட்டுவதில் என்ன நியாயம் இருக்கிறது? இதெல்லாம் முறையில்லை. இதையெல்லாம் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி. என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன சொன்னாலும் சரி, (குறுக்கீடுகள்) ஆதாரத்துடன் என்னிடம் கொண்டு வந்து கொடுங்கள். (குறுக்கீடுகள்) ஆதாரமிருந்தால் பார்த்துவிட்டு, நான் அனுமதி தருகிறேன். இதற்கெல்லாம் நான் அனுமதி

தர மாட்டேன். (குறுக்கீடுகள்) இல்லை, நான் அனுமதி தர மாட்டேன். இதற்கெல்லாம் வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் Point of order raise பண்ணினாலும், நான் அனுமதித்தால்தான் என்பது எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு தெரியாதா? நான் அனுமதிக்க மாட்டேன். என்னிடம் ஆதாரத்தைக் கொண்டு வந்து கொடுங்கள். (குறுக்கீடுகள்) என்னிடம் முறையாக ஆதாரத்தைக் கொண்டு வந்து கொடுங்கள். நான் அதைப் பார்த்து அனுமதித்தால், நீங்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) இதெல்லாம் பேப்பர். இந்தப் பேப்பரை எல்லாம் கூட என்னிடம் கொடுத்து, என்னுடைய அனுமதியை வாங்கியிருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிற்கு வராது.

முற்பகல் 11–20

நீங்கள் எவ்வளவு நேரம் இதுகுறித்து என்னிடத்தில் கேட்டாலும் (குறுக்கீடுகள்) நீங்கள் முறையாக அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த அறிவிப்பு என்னுடைய ஆய்வில் இருக்கிறது. நீங்கள் ஏதாவது ஒரு பொருள் குறித்து raise செய்ய வேண்டியிருந்தால், அதற்கான ஆதாரத்தை என்னுடைய அறையில் வந்து காண்பித்துவிட்டு, என்னுடைய அனுமதியைப் பெற்றதற்குப் பின்னர்தான் எழுப்பலாம். அப்படிச் செய்தால், நான் அனுமதியளிப்பேன் என்ற என்னுடைய இறுதியான பதிலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பத்திரிகைகளில், ஊடகங்களில் வரும் செய்திகளையெல்லாம் ஆதாரமாக வைத்து இந்த அவையிலே பிரச்சினைகளைக் கிளப்பக் கூடாது என்று ஏற்கெனவே நான் உத்தரவு வழங்கியிருக்கிறேன். அந்த உத்தரவை மீறி, நீங்கள் மீண்டும், மீண்டும் இதுபோன்று செய்வது முறையல்ல. நான் அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் முறையாக அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். நான் அவற்றை ஆய்வு செய்து, தேவையேற்படின், அனுமதிப்பேன்; தேவையில்லையெனில், நான் அனுமதிக்கமாட்டேன். நீங்கள் நினைப்பதையெல்லாம் கேட்பதற்கு நான் அனுமதி கொடுத்தால், நான் சபாநாயகராக இருக்க முடியாது. நான் அனைத்தையும் ஆய்வு செய்துதான் அனுமதியளிக்க முடியும். என்னுடைய மனசாட்சிக்கு சரி என்று படுவதைத்தான் நான் அனுமதிப்பேன். நீங்கள் கேட்பதற்காக நான் அனுமதியளிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நான் நல்ல

2017 ஜூன் 28] [பேரவைத் தலைவர்]

முறையிலே, இதை எழுப்ப முடியாது என்று சொல்கின்றேன், நீங்கள் ஏற்றுக்கொண்டு, அமைதியாக இந்தச் சபையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடமும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களிடமும் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இதெல்லாம் தேவையில்லை. (குறுக்கீடுகள்) இதுபோன்று பத்திரிகைகளை சபையில் காட்டுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் சபையை நடத்த எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஆதாரமில்லாமல் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) எனக்கு ஆதாரம் வேண்டும். (குறுக்கீடுகள்) ஆதாரமிருந்தால்தான் அனுமதி தரப்படும். ஆதாரமில்லாமல் இதுபோன்று பத்திரிகைகளில் வரும் செய்திகளைக் காட்டினால் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் இதுபோன்று செய்வது முறையல்ல. நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் எனக்கு சபையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் எனக்கு சபையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) பேப்பர்களையெல்லாம் காட்டவே கூடாது. (குறுக்கீடுகள்) இதையெல்லாம் காட்டக் கூடாது. (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) நான் அனுமதியளிக்காதபோது, அனுமதி கொடுங்கள் என்று என்னை நீங்கள் வற்புறுத்த முடியாது. நீங்கள் இதுபோன்று பத்திரிகைகளைக் காட்டுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஒத்துழைப்புக் கொடுக்கவில்லையென்றால், எனக்கு வேறு வழியில்லாத நிலையில் நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடுகள்) நீங்கள், உங்கள் கருத்துகளை record *செய்வதற்கு அனுமதியளித்தேன். நீங்கள், உங்கள் கருத்துகளை* record *செய்துவிட்டீர்கள். அதை நான் நீக்கவில்லை. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர், உங்கள் கருத்துகளை நீங்கள்* record *செய்துவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள்* record *செய்வதற்கு நான் அனுமதி கொடுத்துவிட்டேன். நீங்கள்* record *செய்துவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் தேவையில்லாத வார்த்தைகளை பேசினால், அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவேன்.*

அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதுபோன்று செய்தித்தாள்களைக் காட்டுவதன்மூலம், இந்தச் சபாநாயகரை நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது. நான் ஆய்வு செய்த பிறகுதான் அனுமதி கொடுப்பேன். (குறுக்கீடுகள்) நான் ஆய்வு செய்த பிறகுதான் அனுமதியளிப்பேன். என்னுடைய conscience–க்கு நியாயம் என்று படுவதைத்தான் நான் அனுமதிப்பேன். இதுபோன்று செய்திகளைக் காட்டினால் நிச்சயம் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, கருத்துகளைப் பதிவு செய்வதற்கு அனுமதியளிக்கிறேன். ஆனால், அதேநேரத்தில் தேவையில்லாத வார்த்தைகளைக் கூறினால், அவற்றை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குட்கா விற்பனை செய்திருப்பதில் முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. அது தடைசெய்யப்பட்டிருக்கக்கூடிய ஒரு போதைப் பொருள். **

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் வேண்டாம். (குறுக்கீடு) இவையெல்லாம் அவைக் குறிப்பில் வராது. இதை அவைக் குறிப்பிலிருந்து நான் நீக்குகிறேன். **(குறுக்கீடுகள்)** இதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நான் நீக்குகிறேன். **(குறுக்கீடுகள்)** அது விசாரணையில் இருக்கிறது. **(குறுக்கீடுகள்)** விசாரணையில் இருக்கிற பொருள் குறித்து, என்னுடைய அறைக்கு வந்து, அதற்கான ஆதாரத்தைக் கொடுத்த பிறகு raise பண்ணுங்கள். அவ்வளவுதான். எதிர்க்கட்சித் தலைவர், பதிவு செய்தது போதும். தயவுசெய்து உட்காருங்கள். எனக்கு சபையை நடத்த ஒத்துழைப்பு கொடுங்கள். நான் agenda–விலுள்ள அடுத்த அலுவலுக்குப் போக வேண்டும். (குறுக்கீடுகள்) வேறு என்ன சொன்னாலும் நான் இதுசம்பந்தமாக அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) எது சொன்னாலும் அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) இதற்கு மேலே சபையை நடத்த எனக்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்றால், எனக்கு வேறு வழியில்லை. நான் உங்களை வெளியேற்ற வேண்டியிருக்கும். நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். ஏற்கெனவே ஒரு முறை நான் நடவடிக்கை எடுத்துவிட்டேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

2017 ஜூன் 28] [பேரவைத் தலைவர்]

இரண்டாவது முறை நடவடிக்கையை விதிகளின்படி எடுத்தால் என்ன என்று உங்களுக்கே தெரியும். ஆகவே, நீங்கள் தயவுசெய்து அவையை நடத்த எனக்கு ஒத்துழைப்பு தாருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்க முடியாது. நான் அதையெல்லாம் அனுமதிக்கமாட்டேன். (குறுக்கீடுகள்) நான் இதற்கு அனுமதியே கொடுக்கமாட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் தயவுசெய்து ஆதாரத்தைக் கொண்டுவந்து தாருங்கள். (குறுக்கீடுகள்) ஆதாரம் இல்லாமல் பேசுவது என்ன முறை? (குறுக்கீடுகள்) எனக்கு கெட்ட பெயரெல்லாம் இல்லை. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என் மேல் பரிதாபப்பட்டு எனக்குக் கெட்ட பெயர் வரும் என்று சொல்கிறீர்கள். சரியாக சபையை நடத்துகிறேன் என்று எனக்கு நல்ல பெயர்தான் வரும். இதை அனுமதித்தால்தான் கெட்ட பெயர் வரும். (குறுக்கீடுகள்) மறைக்க மாட்டேன். மறைக்கவில்லை. என்னிடம் ஆதாரம் கொடுங்கள். நீங்கள் ஆதாரம் கொடுங்கள். நான் உறுதியாக அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) ஆதாரம் இல்லாமல் இப்படி எழுப்பினால் எப்படி? செய்தித்தாள்களைக் காட்டுவது நியாயமா? (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே தீர்ப்பு சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் எவ்வளவு நேரம் வற்புறுத்தினாலும் சரி, இது சரியல்ல. (குறுக்கீடுகள்) ஆதாரம் இருந்தால் கொடுங்கள். நான் எதிர்க்கட்சித் தலைவரைப் பதிவு செய்ய அனுமதித்துவிட்டேன். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இதெல்லாம் சரியல்ல. எனக்கு ஒத்துழைப்பு கொடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: *உயிரைக் காக்கக்கூடிய நிலையிலே ஒரு பிரச்சினையை நான் எழுப்பி, அதற்கு சபாநாயகர் அவர்கள் பேசுவதற்கு அனுமதி தராத காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இதைக் கடுமையாகக் கண்டித்து, எங்களுடைய கண்டனத்தைத் தெரிவிக்கக்கூடிய வகையிலே நாங்கள் வெளிநடப்புச் செய்கின்றோம்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கரி. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்களும் அதைத்தானே பேசப் போகிறீர்கள்? (குறுக்கீடுகள்) வேறு பேசுகின்றீர்களா? குட்காவா? (குறுக்கீடுகள்) இதுபோன்று செய்தித்தாள்களைக் காட்டக் கூடாது.*

[*2017 ஜூன் 28*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஒரு நல்லாட்சி நடந்துகொண்டிருக்கிறது. இந்த ஆட்சிக்கு கெட்ட பெயர் வரக் கூடாது என்பதை எடுத்துக்காட்டுவதற்காக நாங்கள் இங்கே பேசுவதற்கு உங்களிடம் நேரம் தாருங்கள் என்று கோருகிறோம். எங்களுக்கு வரக்கூடிய தகவல்களை, பொதுவான தகவல்களை நாங்கள் சொல்ல வேண்டிய கடமையிலே இருக்கிறோம். இங்கே நமது அரசு நல்லரசாக நடந்துகொண்டிருக்கும்போது வெளியிலேயிருந்து வரக்கூடிய தகவல்கள் முற்றிலும் மாறுபட்டதாக வருகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கரி. இராமசாமி அவர்களே, சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஆதாரத்தோடு என்னிடம் கொண்டுவந்து கொடுங்கள். (குறுக்கீடுகள்) ஆதாரம் கொண்டுவந்து கொடுங்கள். நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) எனக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. (குறுக்கீடுகள்) நீங்கள் தக்க ஆதாரத்தோடு என்னுடைய அறையிலே கொடுத்தால் நான் ஆராய்ந்து, அது உண்மை என்று இருக்குமேயானால், நிச்சயம் அனுமதி தருகிறேன். நீங்கள் இந்த அவையிலே விவாதம் நடத்தலாம். நான் ஏற்கெனவே தீர்ப்பு வழங்கிவிட்டேன். செய்தித்தாளிலே வருவதை, தொலைக்காட்சியிலே வருவதையெல்லாம் வைத்து என்னிடம் கேட்க முடியாது. நான் அனுமதி தரமாட்டேன். போதும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து உங்கள் கட்சியினர்தான் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். நான் அதை அனுமதிக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடம் அறிவிப்பு கொடுத்திருப்பதைப் பற்றியே நான் பேசவில்லை. உங்களிடம் இரண்டு பிரச்சினைகள் குறித்து அறிவிப்பு கொடுத்திருக்கிறேன். இரண்டு பிரச்சினைகளைப் பற்றியும் நான் பேசவில்லை. அந்த இரண்டு பிரச்சினைகளையும் உங்களிடம் நிரூபிக்க வேண்டும். சில சட்ட சிக்கல்கள் இருக்கின்றன. எனக்குத் தெரியும். அதுவல்ல. இந்த அரசு இனிமேல் ஒழுங்காக நடைபெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சில தவறுகள் வருகின்றன. தவறுகளைத் திருத்துங்கள். இந்த அரசை ஒழுங்காக நடத்துங்கள். நீங்கள் ஒற்றுமையாக இருங்கள். இதில் என்ன தவறு இருக்கிறது? இதில் நான் என்ன சொல்லிவிட்டேன்?*

2017 ஜூன் 28]

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் ஒற்றுமையாக இருக்கச் சொல்லியதற்கு நன்றி. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இந்தச் சபையை நடத்துவதற்கு எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடு) திரு. முஹம்மது அபூபக்கர், நீங்கள் சொல்லுங்கள். நீங்களும் திரு. கரி. இராமசாமி அவர்களைப் போன்று ஒற்றுமையாக இருக்கச் சொல்லி,* advice *செய்கிறீர்களா? (குறுக்கீடு) திரு. கரி. இராமசாமி, சொல்லுங்கள், எனக்கு நேரமில்லை.*

திரு. கரி. இராமசாமி: *நேரமில்லை என்றால், முக்கியமான* matter*–ஐப் பேசவிடமாட்டீர்களென்றால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பேச ஆரம்பித்தீர்களென்றால். . . (குறுக்கீடு) நீங்கள் பேசுவதைச் சுருக்கமாகப் பேசி முடியுங்கள். எனக்கு நேரமில்லை.*

திரு. கரி. இராமசாமி: *இந்த அரசு நல்ல முறையில் நடக்க வேண்டுமென்றால், நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) அதை நாங்கள் விரும்புகிறோம். எங்களுக்கு அரசாங்கம் ஒழுங்காக நடக்க வேண்டும். நாங்கள் நினைக்கிற மாதிரி, நல்ல காரியங்கள் தமிழ்நாட்டில் நடக்க வேண்டும்; வளர்ச்சிப் பணிகள் நடக்க வேண்டும். ** அதில் என்ன தவறு இருக்கிறது?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கரி. இராமசாமி, நீங்கள் குற்றச்சாட்டு சொல்கிறீர்கள். நீங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, ** என்று சொல்கிறீர்களே? ** பற்றி சொன்ன அந்த வார்த்தைகளெல்லாம் தேவையில்லை. அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) உட்காருங்கள் திரு. கரி. இராமசாமி. நீங்கள் நல்ல மனிதர், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், என்னவென்று சொல்லுங்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

*__திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினராகிய எங்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ** எதிர்க்கட்சியிலிருக்கக்கூடிய நாங்கள். . . (குறுக்கீடு) ஒரேயொரு விஷயம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. முஹம்மது அபூபக்கர், அதுவெல்லாம் வேண்டாம். நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பேச வந்த விஷயம் குறித்து பேசிவிட்டீர்கள் அல்லவா, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசியது போதும், உட்காருங்கள்.*

(அவ்வுறுப்பினர் (திரு.கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்) அவையிலிருந்து வெளியேறினார்.)

3. கவன ஈர்ப்பு

பத்திரப்பதிவு கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி எஸ். விஜயதரணி, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. செ. ராஜேஷ் குமார், திரு. இ. பெரியசாமி, திரு. எஸ். சுதர்சனம் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.* Agenda–*வில் இருப்பதைமட்டும் சொல்லுங்கள், அதிக நேரம் எடுக்காதீர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறையில் வழிகாட்டி மதிப்பீடு, சந்தை மதிப்பு ஆகியவை 33 சதவிகிதம் குறைந்துள்ளதை வரவேற்கிறோம். ஆனால், பத்திரப் பதிவுக் கட்டணங்கள் அபரிமிதமாக உயர்ந்துள்ளன. இதனால், மக்கள் கடுமையான சிரமத்திற்கு உள்ளாகியிருக்கின்றனர். இது தவறான ஒரு . . .*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*